ஆகவே, அதற்குள்ளே குளிர் சாதன வசதி பொருந்த வேண்டுமென்ற பிரச்சனை அடுத்தாற்போல் வரக்கூடும். மண்டபம் என்று கட்டினால், குளிர்சாதனம் பொருத்தப்பட்ட மண்டபம் என்றால் கடற்கரையில் இருந்தாலும் வேறு எங்காவது கானகத்திற்குள்ளே இருந்தாலும் ஒன்றுதான். ஆகவே எந்தப் பகுதிக்குத் தேவைப்படும் என்பதை ஒட்டித்தான் பிரச்சனைகள் கவனிக்கப்படுகின்றன. அந்த வகையில் கலைவாணர் அரங்கம் என்பதும் ஏறத்தாழ கடற்கரையை ஒட்டித்தான் இருக்கிறது. ஆகவே, மாண்புமிகு உறுப்பினருடைய அந்தப் பிரச்சனை இப்பொழுது எழவில்லை.

திரு. செ. இரத்தினவேலு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாநிலம் முழுவதிலும் சீரணி அரங்கங்கள் இல்லாத ஒவ்வொரு ஒன்றியத்திலும் சீரணி அரங்குகள் அமைக்கின்ற திட்டம் உள்ளதா? அப்படி இல்லையென்றால் இனியாவது அமைப்பதற்கு அரசு முயற்சி எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, அறிஞர் அண்ணா அவர்கள் உருவாக்கிய அந்தச் சீரணி அரங்கம் அமைக்கின்ற திட்டம் என்பது முன்பே கைவிடப்பட்டு விட்டது. இப்பொழுது அது நடைமுறையிலே இருப்பதாகத் தெரியவில்லை. என்றாலும் அங்கங்கே, பொதுமக்களுக்கு நிகழ்ச்சிகளை நடத்துவதற்குத் தேவையான அத்தகைய அரங்குகளைக் கட்டுகின்ற முயற்சியை அந்த, அந்த ஒன்றியங்கள் அல்லது நகராட்சிகள் எடுத்தால், அதற்கு எந்த அளவிலே அரசு உதவி செய்வது என்பதைப் பற்றி பரிசீலிக்க இயலும்.

கடையநல்லூர் மருத்துவ மனை.

767. (*வினா எண். 5041): திரு. தெ. பெருமாள் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கடையநல்லூர் அரசு மருத்துவமனைக்கு புதிய கட்டடங்கள் கட்டி அதிக படுக்கைகள் அமைக்க அரசு திட்டமிட்டுள்ளதா ?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹாண்டே : இல்லை.

(முற்பகல் 9-50)

திரு. நெ. பெருமாள் : பேரவைத் தலைவர் அவர்களே, கடைய நல்லூர் அரசு மருத்துவ மனையில் 52 படுக்கைகள் கொண்ட அறைகள் 20 ஆண்டுகளுக்கு முன்பாக காங்கிரஸ் ஆட்சியிலே கட்டப்பட்டது. இப்போது மக்களுடைய ஜனத் தொகை இலட்சத்திற்கு மேற்பட்டுள்ளதால், அதை விரிவுபடுத்தி, படுக்கைகள் வருகின்ற ஆண்டிலாவது புதியதாக புதுப்பிக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மருத்துவ மனையை பொறுத்த வரையில் அது 54 படுக்கைகள் கொண்டது. இதிலே மாண்புமிகு உறுப்பினர் சொல்கின்ற மாதிரி உள் நோயாளிகளுடைய எண்ணிக்கை சராசரியாக 95 ஏறத்தாழ இரண்டு மடங்காக இருக்கிறது. புற நோயாளிகள் 515 ஆக இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் சொல்லியிருக்கக்கூடிய இந்த வாதம் நியாயமானது வாதமாக இருந்தாலும் நிதி நிலைக்கு ஏற்ப தற்போது முடியாது என்று முதல் கேள்விக்கு பதில் அளித்தேன். மாண்புமிகு உறுப்பினர் கோரிக்கை பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. நெ. பெருமாள் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் 54 படுக்கைகளை கொண்டிருப்பதாக அறிவித்தார்கள். எங்களுடைய கடையநல்லூரை பொறுத்தவரையில் கிட்டத்தட்ட 150-க்கு மேற்பட்ட உள் நோயாளிகள் படுக்கைகள் இல்லாமல் தரையிலே படுத்துக் கொண்டிருக்கிறார்கள். வெளியிலிருந்து 2,000-க்கு மேற்பட்ட நோயாளிகள் தினம் வந்து சென்று கொண்டிருக்கிறார்கள். அது மட்டுமல்லாமல் பெரிய ஆஸ்பத்திரியான அந்த ஆஸ்பத்திரியில் ஆபரேஷன் தியேட்டர் இருந்தும் ஆபரேஷன் செய்வதற்கு எம்.எஸ். படித்த டாக்டர் இல்லாத குறை இருக்கிறது. ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஒரு எம்.எஸ். படித்த டாக்டரை அங்கே போட்டு விரைவுபடுத்தும்படி கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த கோரிக்கை உடனடியாக நிறைவேற்றப்படும். அங்கே உள் நோயாளிகளுடைய படுக்கைகளின் எண்ணிக்கை 54 ஆக இருந்தாலும் மற்றவர்களை தரையிலே போடக்கூடிய படுக்கைகளில் படுக்க வைக்கவேண்டி இருப்பதால், மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கை பரிசீலிக்கப் படும் என்று சொன்னேன்.